கற்கண்டு

இயல் ஒன்று

# எழுத்துகளின் பிறப்பு

அ, உ, க, ப –ஆகிய எழுத்துகளை ஒலித்துப் பாருங்கள். வாயைத் திறந்து ஒலித்தாலே அ என்னும் எழுத்து ஒலிக்கிறது. உ என்னும் எழுத்தை ஒலிக்கும்போது இதழ்கள் குவிகின்றன. நாக்கின் முதற்பகுதி மேல் அண்ணத்தில் ஒட்டும்போது க என்னும் எழுத்து பிறக்கிறது. ப என்னும் எழுத்து இதழ்கள் இரண்டும் ஒட்டுவதால் பிறக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு எழுத்துக்கும் பிறக்கும் இடமும் பிறக்கும் முயற்சியும் வெவ்வேறாக உள்ளன.

### பிறப்பு


உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர். எழுத்துகளின் பிறப்பினை இடப்பிறப்பு , முயற்சிப் பிறப்பு என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

### எழுத்துகளின் இடப்பிறப்பு

- உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.

### எழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

#### உயிர் எழுத்துகள்



- அ, ஆ ஆகிய இரண்டும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.
- இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.
- உ, ஊ, ஒ, ஓ, ஒள ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.

www.tntextbooks.in

## மெய் எழுத்துகள்




- க், ங் – ஆகிய இருமெய்களும் நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ச், ஞ் – ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி, நடுஅண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ட், ண் – ஆகிய இருமெய்களும் நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- த், ந் – ஆகிய இருமெய்களும் மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கின்றன.
- ப், ம் – ஆகிய இருமெய்களும் மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ய் – இது நாக்கின் அடிப்பகுதி, மேல் வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது.
- ர், ழ் – ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.
- ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ள் – இது மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.
- வ் – இது மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கிறது.
- ற், ன் – ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.

## சார்பெழுத்துகள்

ஆய்த எழுத்து வாயைத்திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது. பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.

**2. பொருத்துக.**

ஒற்றளபெடை – குடிதழீஇ
செய்யுளிசை அளபெடை – அரங்ங்கம்
இன்னிசை அளபெடை – உழாஅர்
சொல்லிசை அளபெடை – உடுப்பதூஉம்

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. அளபெடை என்னும் சொல்லுக்கு ________ என்பது பொருள்.
2. அளபெடை ______ வகைப்படும்.
3. செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் குறில் ________ ஆகி அளபெடுப்பது ______ அளபெடை.

**ஆ) குறுவினாக்கள்**

1. உயிரளபெடையைச் சான்று தந்து விளக்குக.
2. உயிரளபெடையின் வகைகள் யாவை ?
3. ஒற்றளபெடை என்றால் என்ன?
4. இன்னிசையளபெடையைச் சான்றுடன் விளக்குக.

**செயல்திட்டம்**

திருக்குறளின் அறத்துப்பாலில் அளபெடை இடம்பெற்றுள்ள குறட்பாக்களைத் தொகுக்க. அவற்றை அளபெடைகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.

## எழுத்துகளின் பிறப்பு

எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஒலியணுக்கள்.

மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலிஎழுத்து. – நன்னூல், 58

உயிருள்ள உடம்பினுள்ளே எழுகின்ற காற்று மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகியவற்றைப் பொருந்தி உதடு, நாக்கு, பல், மேல்வாய் ( அண்ணம் ) ஆகிய இவ்வுறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன.

### இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு


எழுத்துகளின் பிறப்பை இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இருவகையாகப் பிரிக்கலாம். எழுத்துகள் தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும், உதடு முதலான உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் கூறுவர்.

உயிரெழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் முதலெழுத்துகள் எனப்படும். மெய்யெழுத்துகளை ஒலிக்கும்போது வேறுபட்ட மூன்று ஒலிகளை நாம் கேட்கலாம். அவை வல்லின ஒலி, மெல்லின ஒலி, இடையின ஒலி என்பன. அவ்வொலிகள் வேறுபடுவதற்குக் காரணம், அவை பிறக்கும் இடங்கள் வேறுபடுவனவே.

எழுத்துகளின் பிறப்பு
(ஒலி உறுப்புகள்)

- இடப்பிறப்பு (காற்றறைகள்)
  - மார்பு
  - கழுத்து
  - தலை
  - மூக்கு
- முயற்சிப்பிறப்பு (ஒலிப்பு முனைகள்)
  - இதழ்
  - நா
  - பல்
  - அண்ணம்

## ஒலிப்புப் பயிற்சி



எழுத்துகளின் பிறப்பை நன்னூலார் கூறியதனைப்போலவே மொழியியல் அறிஞர் ஒலி நூலுள் அடக்குவர்.

ஒலி எழக் காரணமான காற்று நிலைபெறும் இடங்களைக் காற்றறைகள் எனவும், ஒலி எழுவதற்குத் துணை செய்யும் உறுப்புகளை ஒலிப்புமுனைகள் எனவும் கூறுவர்.

## முதலெழுத்துகளின் இடப்பிறப்பு

- ❖ பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், இடையின எழுத்துகள் ஆறும் கழுத்திலிருந்து பிறக்கின்றன.
- ❖ மெல்லின எழுத்துகள் ஆறும் மூக்கிலிருந்து பிறக்கின்றன.
- ❖ வல்லின எழுத்துகள் ஆறும் மார்பிலிருந்து பிறக்கின்றன.

ஆவி இடைமை இடமிடறு ஆகும்
மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை. – நன்னூல், 75

(ஆவி – உயிரெழுத்து; இடைமை – இடையினம்; மிடறு – கழுத்து; மென்மை – மெல்லினம்; உரம் – மார்பு.)

## முதலெழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

### அ) உயிர் – பன்னிரண்டு

❖ அ, ஆ ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.

அவற்றுள்,
முயற்சியுள் அஆ அங்காப் புடைய. – நன்னூல், 76

(அங்காப்பு – வாயைத் திறத்தல்)

❖ இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்து எழுத்தும் வாயைத் திறப்பதனோடு மேல்வாய்ப் பல்லை நாவிளிம்பு தொடுவதனால் தோன்றுகின்றன.

இஈ எஏ ஐஅங் காப்போ(டு)
அண்பல் முதல்நா விளிம்புற வருமே. – நன்னூல், 77

❖ உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து எழுத்தும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் தோன்றுகின்றன.

உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே. – நன்னூல், 78

### ஆ) மெய் – பதினெட்டு

❖ க், ங் – இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

❖ ச், ஞ் – இவ்விரு மெய்களும் இடைநா (நடு நா), நடு அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

❖ ட், ண் – இவை நாவினது நுனி, அண்ணத்தின் நுனியைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

தமிழ்

கஙவும் சஞவும் டணவும் முதலிடை
நுனிநா அண்ணம் உறமுறை வருமே. – நன்னூல், 79

- ( நா – நாக்கு; அண்ணம் – மேல்வாய்ப் பகுதி; க, ங, ச, ஞ, ட, ண என்னும் உயிர்மெய்கள் – க், ங், ச், ஞ், ட், ண் என்னும் மெய்களைக் குறிக்கும். பின்வரும் நூற்பாக்களில் உள்ளவற்றையும் இவ்வாறே கொள்க. )
- த், ந் – மேல்வாய்ப் பல்லின் அடியை, நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன.

அண்பல் அடிநா முடியுறத் தநவரும். – நன்னூல், 80

- ப், ம் – மேல் உதடும் கீழ்உதடும் பொருந்த இவை தோன்றும்.

மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும். – நன்னூல், 81

- ய் – இது நாக்கின் அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் தோன்றுகிறது.
- அடிநா அடியணம் உறயத் தோன்றும். – நன்னூல், 82
- ர், ழ் – இவை மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.
- அண்ணம் நுனிநா வருட ரழவரும். – நன்னூல், 83
- ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை, நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது.
- ள் – இது மேல்வாயை நாவின் ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது.

அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும். – நன்னூல், 84

- வ் – இது மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது.

மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே. – நன்னூல், 85

- ற், ன் – இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.

அண்ணம் நுனிநா நனியுறின் றனவாகும். – நன்னூல், 86

### சார்பெழுத்துகளின் இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

ஆய்தமாகிய சார்பெழுத்து, தலையை இடமாகக்கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சிப் பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தலே ஆகும். பிற சார்பெழுத்துகள் யாவும், தத்தம் முதலெழுத்துகள் தோன்றுதற்குரிய இடத்தையும், அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு ஒலிக்கின்றன.

ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய. – நன்னூல், 87

பயிற்சி: உதடுகள் ஒட்டா எழுத்துகள் கொண்ட சொற்களை வட்டமிடுக.

கம்பம், நான்கு, வேம்பு, தாவரம், உலக்கை, பார்வை

தமிழ்

2. இன்னிசை அளபெடையில் ________எழுத்து அளபெடுக்கும்.

அ) மெய் ஆ) உயிர்மெய் இ) ஆய்தம்

3. இசைநிறை அளபெடையில் அளபெடுத்தல் நடைபெறாவிடில் யாப்பிலக்கணம்__________

அ) பிழையும் ஆ) பிழையாது

4. பெயர்ச் சொல்லை வினைச்சொல்லாக மாற்றுவது ________ அளபெடையாகும்.

அ) சொல்லிசை ஆ) இன்னிசை இ) இசைநிறை

5. ஆய்த எழுத்து அளபெடுப்பது ________ அளபெடையே.

அ) ஒற்றளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை

இ) இன்னிசை அளபெடை

## எழுத்துகளின் பிறப்பு

எழுத்துகள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாயிருப்பவை ஒலியணுக்களே ஆகும். அவை உயிரின் முயற்சியால், உடம்பினுள் இருக்கும் காற்றினால் எழுப்பப்படுகின்றன. அவ்வொலி அணுக்கள் பல சேர்ந்து உண்டாவது ஒலி எழுத்தாகும். இவ்வொலியே செவியில் நமக்குப் புலனாகின்றது.

தமிழ் எழுத்துகளுள் சில மார்பினின்றும், சில கழுத்தினின்றும், சில தலையினின்றும், சில மூக்கினின்றும் பிறக்கின்றன. இவ்வாறு எல்லா எழுத்துகளும் இந்நான்கு இடங்களிலிருந்தே பிறந்தாலும், அவை உதடு, நாக்கு, பல், அண்ணம் (மேல்வாய்) ஆகிய நான்கு உறுப்புகளின் தொழில் வேறுபாட்டால் வெவ்வேறு எழுத்துகளாக வேறுபட்ட ஒலியுடன் தோன்றுகின்றன.

**நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப**
**எழுமணுத் திரள்உரம் கண்டம் உச்சி**
**மூக்குற்று இதழ்நாப் பல்லணத் தொழிலின்**
**வெவ்வேறு எழுத்தொலி யாய்வரல் பிறப்பே —நன்னூல் 74**

இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

தமிழ் எழுத்துகள் முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவ்வெழுத்துகளின் பிறப்பை இடப் பிறப்பு, முயற்சிப் பிறப்பு என இரு வகையாகப் பிரிக்கலாம். எழுத்து தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை இடப் பிறப்பு என்றும், உதடு முதலிய உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதை முயற்சிப் பிறப்பு என்றும் கூறுவர்.

உயிரெழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் முதலெழுத்துகள் ஆகும். மெய்யெழுத்துகளை ஒலிக்கும்போது மூன்றுவித வேறுபாட்டொலிகளை நாம் கேட்க இயலும். அவை வலித்தலோசை, மெலித்தலோசை, இடைப்பட்ட ஓசை என்பனவாகும். அவ்வோசைகள் உண்டாவதற்கு, அவ்வெழுத்துகள் பிறக்குமிடங்கள் வேறுபடுகின்றன.

முதலெழுத்துகளின் இடப் பிறப்பு

1. உயிர் எழுத்துகள் பன்னிரெண்டும், மெய்யெழுத்துகளுள் இடையின எழுத்துகள் ஆறும் கழுத்தினின்று பிறக்கின்றன.
2. மெல்லின எழுத்துகள் ஆறும் மூக்கினின்று பிறக்கின்றன.
3. வல்லின எழுத்துகள் ஆறும் மார்பினின்று பிறக்கின்றன.

**ஆவி இடைமை இடமிடறு ஆகும்**
**மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை** –நன்னூல் 75

முதலெழுத்துகளின் முயற்சிப் பிறப்பு

அ, ஆ –இவை வாயைத் திறத்தலால் தோன்றுகின்றன.

இ, ஈ, எ, ஏ, ஐ –இவை வாயைத் திறத்தலோடு, மேல்வாய்ப் பல்லை நாக்கினடியின் ஓரங்கள் தொடுதலால் தோன்று கின்றன.

உ, ஊ, ஒ, ஓ, ஔ –இவை உதடுகளைக் குவித்து ஒலிப்பதால் உண்டாகின்றன.

முயற்சியுள் அ ஆ அங்காப்புடைய – நன்னூல் 76

இ, ஈ, எ, ஏ, ஐ அங் காப்போடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே – நன்னூல் 77

உ, ஊ, ஒ, ஓ ஔ இதழ் குவிவே – நன்னூல் 78

க,ங – இவை முதல் நா முதல் அண்ணத்தைத் தொடுதலால் தோன்றுகின்றன.

ச,ஞ – இவை இடைநா, இடை அண்ணத்தைத் தொடுதலால் தோன்றுகின்றன.

ட,ண – இவை நுனிநாக்கு மேல்வாயின் நுனியைத் தொடுதலால் தோன்றுகின்றன.

கஙவும் சஞவும் டணவும் முதலிடை
நுனிநா அண்ணம் உறமுறை வருமே. – நன்னூல் 79

த, ந – மேல்வாய்ப் பல்லினது அடியை, நாக்கின் நுனி பொருந்துதலால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன.

ப, ம – இவை மேலுதடும் கீழுதடும் பொருந்துதலால் தோன்றுகின்றன.

ய – இது நாக்கின் அடி, மேல்வாயின் அடியைப் பொருந்துதலால் தோன்றுகிறது.

ர, ழ – இவை மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதால் பிறக்கின்றன.

அண்பல் லடிநா முடியுறத் தநவரும் – நன்னூல் 80
மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும் – நன்னூல் 81
அடிநா அடியணம் உறயத் தோன்றும் – நன்னூல் 82
அண்ணம் நுனிநா வருட ரழவரும் – நன்னூல் 83

ல– இது மேல்வாய்ப் பல்லினடியை நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குதலால் பிறக்கிறது.

ள– இது மேல்வாயை நாவின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும் – நன்னூல். 84

வ– இது மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துதலால் பிறக்கிறது.

ற, ன–இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.

மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே – நன்னூல் 85
அண்ணம் நுனிநா நனியுறின் றனவரும் – நன்னூல் 86

சார்பெழுத்துகளின் இடப் பிறப்பும் முயற்சிப் பிறப்பும்

சார்பெழுத்துகளுள் ஒன்றாகிய ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது. வாயைத் திறந்து ஒலித்தலே இதன் முயற்சிப் பிறப்பாகும்.

பிற சார்பெழுத்துகள் யாவும் அவற்றின் முதலெழுத்துகள் தோன்றுவதற்குரிய இடத்தையும் அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு ஒலிக்கின்றன.

ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவும் தம்முதல் அனைய –நன்னூல் 87

பயிற்சி

I. விரிவான விடை தருக.

1. எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன?
2. முதலெழுத்துகள் பிறக்கும் இடங்களைக் கூறுக.
3. ஆய்த எழுத்திற்குரிய இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பினைக் கூறுக.

# 2025 GROUP 4

# NEW SYLLABUS

# 6

# சார்பெழுத்துகள்

**SOURCE:**

**6,7,10 New Tamil**

**7,8,9,10  Old Tamil**

**7,8,9,10 Tamil (2003-2008 Edition)**

கற்கண்டு

இயல் இரண்டு

# முதலெழுத்தும் சார்பெழுத்தும்

**எழுத்துகள் இரண்டு வகைப்படும்**


1. முதல் எழுத்துகள்
2. சார்பு எழுத்துகள்

**முதல் எழுத்துகள்**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.

**சார்பு எழுத்துகள்**

முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள். இவை பத்து வகைப்படும்.




1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம்
6. குற்றியலுகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

இவ்வகுப்பில் உயிர்மெய், ஆய்தம் ஆகிய இரண்டு சார்பெழுத்துகள் பற்றிக் காண்போம்.

**உயிர்மெய்**

- மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன.

www.tntextbooks.in

- உயிர்மெய் எழுத்தின் ஒலிவடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.
- வரிவடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும். ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.
- முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து வகையுள் அடங்கும்.

**ஆய்தம்**

- மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்றது.
- முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, அஃகேனம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.
- நுட்பமான ஒலிப்புமுறையை உடையது.
- தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- தனித்து இயங்காது.
- முதல் எழுத்துகளாகிய உயிரையும், மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்

## கற்பவை கற்றபின்

1. முதல் எழுத்துகள், சார்பு எழுத்துகள் தொடர்பைப் பற்றி விவாதிக்க
2. முதல் எழுத்துகள் மட்டும் இடம்பெறும் சொற்களை எழுதுக.
   (எ.கா.) ஆம்
3. முதல் எழுத்துகள் இடம்பெறாத சொற்களை எழுதுக.
   (எ.கா.) குருவி

## மதிப்பீடு

1. முதல் எழுத்துகள் என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன ?
2. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?
3. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?

# இலக்கணம்

ஒருவர் தம் கருத்தை வெளியிடவும், அதைக் கேட்போர் புரிந்து கொள்ளவும் கருவியாக அமைவது மொழி. அம்மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் துணை செய்வது இலக்கணம் ஆகும்.

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலிக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பனவாகும்.

## 1. எழுத்து

### எழுத்து இலக்கணம்

தமிழ் எழுத்துகளின் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி, பதம், புணர்ப்பு எனும் பன்னிரு பகுதிகளையும் விளக்கிக் கூறுவது எழுத்து இலக்கணம் ஆகும்.

### எழுத்துகளின் வகைகள்

முதலெழுத்துகள்

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் (அ. . . .ஔ) மெய்யெழுத்துகள் பதினெட்டும் (க். . . .ன்) ஆகிய முப்பது எழுத்துகளும் மொழிக்கு முதன்மையான எழுத்துகளாகும். இவையே பிற எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாகவும் உள்ளன. ஆதலால் இம் முப்பது எழுத்துகளையும் முதலெழுத்துகள் என்பர்.

**உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே — நன்னூல் 59**

சார்பெழுத்துகள்

முதல் எழுத்துகளாகிய உயிர் எழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் சார்ந்து இயங்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும். இச்

சார்பெழுத்துகளைப் பத்து வகைகளாகப் பகுப்பர். அவை, உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பனவாகும்.

இவற்றுள் குற்றியலுகரம், குற்றியலிகரம் பற்றி முன்வகுப்பில் கற்றிருப்பீர்கள். மேலும் சிலவற்றை இங்குக் காண்போம்.

## உயிரளபெடை

புலவர்கள் தாம் இயற்றும் செய்யுளில் ஓசை குறையும்போது, அவ்விடத்திலுள்ள எழுத்தோடு அதன் இன எழுத்தைச் சேர்த்து, ஓசையை நிறைவு செய்வர். இதற்கு அளபெடை என்பது பெயர். இருக்கும் அளவைக் காட்டிலும் மிகுந்து ஒலிக்கச் செய்வது என்பது இதன் பொருள்.

உயிரெழுத்தைக் கொண்டு ஓசையை நிறைவு செய்தால், அதனை உயிரளபெடை என்பர். மெய்யெழுத்தைக் கொண்டு நிறைவு செய்வதை ஒற்றளபெடை என்பர். (ஒற்றெழுத்து–மெய்யெழுத்து)

உயிரளபெடை மூவகைப்படும்: செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை.

**செய்யுளிசை அளபெடை**

'ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்'.

இக்குறட்பாவில் 'உழாஅர்' எனும் சொல் அளபெடுத்து வந்துள்ளது. உழார் என்பது இயல்பான சொல். இது செய்யுளின் இடையில் ஓரசையாகி, ஓசை குறைந்து நிற்கின்றது. இதனை நிறைவு செய்ய, சொல்லின் இடையில் உள்ள ஆ என்னும் உயிரெழுத்து (ழ்+ஆ=ழா) தனக்குரிய இரண்டு மாத்திரையின் மிகுந்து ஒலிக்கின்றது. இதற்கு அடையாளமாக இவ்வெழுத்தின் இனமான 'அ' எனும் குறிலெழுத்து அருகில் அமைந்துள்ளது.

இவ்வாறு செய்யுளில் ஓசையை நிறைவு செய்தற் பொருட்டு, சொல்லின் முதல், இடை, கடையிலுள்ள உயிர்நெடில் எழுத்துகள் அளபெடுத்து வருவதைச் செய்யுளிசை அளபெடை என்பர். இதை இசைநிறை அளபெடை என்றும் வழங்குவர்.

| | | |
|---|---|---|
| ஓஒதல் வேண்டும் | – | சொல்லின் முதலில் அளபெடை வந்துள்ளது. |
| தொழாஅள் | – | சொல்லின் இடையில் அளபெடுத்துள்ளது. |
| நடுவொரீஇ | – | சொல்லின் இறுதியில் அளபெடுத்து உள்ளது. |

குறிப்பு: செய்யுளிசை அளபெடையில், அளபெடுத்த பின்னரே செய்யுளின் யாப்பிலக்கணம் பிழையின்றி அமைவதைக் காண்க.

**இன்னிசை அளபெடை**

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

இக்குறட்பாவில் உள்ள 'கெடுப்பதூஉம்', 'எடுப்பதூஉம்' என்னும் சொற்கள் அளபெடுத்து வந்துள்ளவையாகும். கெடுப்பதும், எடுப்பதும் என்பன இயல்பான சொற்கள். இவற்றால் செய்யுளின் ஓசை குறையவில்லை. இருப்பினும் இவை 'கெடுப்பதூம்' 'எடுப்பதூம்' எனக் குறில் நெடிலாகி, அவை மேலும் அளபெடுத்து 'கெடுப்பதூஉம்' 'எடுப்பதூஉம்' என்றாயின. செவிக்கு இனிய ஓசையைத் தரும் பொருட்டு 'து' எனும் குறில் 'தூ' என்று நெடிலாகி 'தூஉ' என அளபெடுத்துள்ளது.

இவ்வாறு செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், செவிக்கு இனிய ஓசையைத் தரும் பொருட்டு உயிர்க் குறில் நெடிலாகி மேலும் அளபெடுப்பது இன்னிசை அளபெடை எனப்படும்.

குறிப்பு: இவ்வளபெடையில், அளபெடாவிடினும், அளபெடுப்பினும் பாடலின் யாப்பிலக்கணம் பிழையின்றி அமைந்துள்ளதைக் காண்க.

**சொல்லிசை அளபெடை**

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

இக்குறட்பாவில் 'தழீ' என்றிருப்பினும் செய்யுளின் ஓசை குறைவதில்லை. 'தழீ' என்பது தழுவுதல் எனப் பொருள் தரும் பெயர்ச் சொல்லாகும். அச்சொல் 'தழீஇ' என அளபெடுத்ததால் தழுவி என வினையெச்சச் சொல்லாயிற்று.

இவ்வாறு செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், பெயர்ச் சொல்லை வினைச்சொல்லாக மாற்றும் பொருட்டு அளபெடுத்தலைச் சொல்லிசை அளபெடை என்பர்.

# ஒற்றளபெடை

கலங்ங்கு நெஞ்சமிலை காண்.

மேற்கண்ட தொடரில் 'கலங்ங்கு' என்னும் சொல்லில் உள்ள மெய்யெழுத்து அளபெடுத்துள்ளது. 'கலங்கு' எனும் இயல்பான சொல்லால், செய்யுளில் ஓசை குறைகின்றது. எனவே இதில் உள்ள மெய்யெழுத்து அளபெடுத்துள்ளது. அதற்குக் குறியீடாக மெய்யெழுத்து இருமுறை வழங்கப்படுகின்றது. இவ்வாறு செய்யுளில் ஓசை குறையும் பொழுது, அதனை நிறைவு செய்வதற்குச் சொல்லிலுள்ள மெய்யெழுத்து அளபெடுத்தலை ஒற்றளபெடை என்பர்.

மெய்யெழுத்துகளுள் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும் ஆய்தெழுத்தும் அளபெடுக்கும். ஒற்றளபெடை சொல்லின் இடையிலும் இறுதியிலும் மட்டுமே நிகழும்.

குறிற்கீழும், குறிலிணைக்கீழும் உள்ள மெய்யெழுத்துகள் மொழியின் இடையிலும் இறுதியிலும் அளபெடுக்கும்.

(எ–டு) **கண்ண் கருவிளை** – குறிற்கீழ் உள்ள ணகரமெய் சொல்லின் இறுதியில் அளபெடுத்தது.

| | | |
|---|---|---|
| விடங்ங் கலந்தானை | – | குறிலிணைக் கீழ் உள்ள ஙகரமெய், சொல்லின் ஈற்றில் அளபெடுத்தது. |
| இலங்ங்கு வெண்பிறை | – | குறிலிணைக் கீழ் உள்ள மெய், சொல்லின் இடையில் அளபெடுத்தது. |
| எஃஃகிலங்கிய கையர் | – | குறிற்கீழ் ஆய்தம் அளபெடுத்தது. |
| இலஃஃகு முத்தின் | – | குறிலிணைக் கீழ் ஆய்தம் அளபெடுத்தது; ஆய்தம் அளபெடுத்ததையும் ஒற்றளபெடை என்றே கூறுவர். |

பயிற்சி

I. **விரிவான விடை தருக.**

1. முதலெழுத்து என்பது யாது?
2. சார்பெழுத்துகளின் வகைகள் யாவை?
3. உயிரளபெடை என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்?
4. செய்யுளிசை அளபெடையைச் சான்றுடன் விவரி.
5. சொல்லிசை அளபெடை – சான்றுகாட்டி விளக்குக.
6. ஒற்றளபெடையை விவரி.

II. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மெய்யெழுத்துகள் ________ வகையைச் சார்ந்ததாகும்.

அ) முதலெழுத்து ஆ) சார்பெழுத்து இ) உயிர்மெய்

# எழுத்து

மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது மொழி. ஒருவர், தம் கருத்தை வெளிப்படுத்தவும், அதனைக் கேட்போர் புரிந்துகொள்ளவும் கருவியாக அமைவதும் மொழியே.

அம்மொழியைப் பிழையின்றிப் பேசவும் கேட்கவும் படிக்கவும் எழுதவும் துணைசெய்வது இலக்கணம் ஆகும்.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் எனத் தமிழிலக்கணம் ஐவகைப்படும்.

## எழுத்துகளின் வகை

முதலெழுத்து, சார்பெழுத்து என எழுத்துகள் இருவகைப்படும்.

## முதலெழுத்துகள்

அ முதல் ஔ வரை உள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், க் முதல் ன் வரை உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகளாகும். இவை சார்பெழுத்துகள் தோன்றுவதற்கு முதற்காரணமாய் இருப்பதனால் முதலெழுத்துகள் எனப்பட்டன.

## சார்பெழுத்துகள்

முதலெழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும். இவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து வகைப்படும். இவற்றுள் உயிரளபெடை, ஒற்றளபெடை குறித்துக் காண்போம்.

## அளபெடை

ஆசிரியர் : இனிய குழந்தைகளே! வணக்கம்.

செந்தில்வடிவு! தெருவில் சிலர் பொருள்களைக் கூவி விற்றுக்கொண்டே செல்கிறார்கள். அவர்கள் என்னென்ன பொருள்களை விற்கிறார்கள் எனச் சொல்.

செந்தில்வடிவு : பூ, பழம், கீரை, மோர் என இப்படிப் பலபொருள்களை விற்கிறார்கள், ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி, நீ அவற்றையெல்லாம் கவனித்திருக்கிறாய்! சரி. பூ, பழம் இவற்றை அவர்கள் எவ்வாறு கூவி விற்கிறார்கள்? வெற்றி! நீ சொல்.

வெற்றி : பூவோஒ பூவு, பழமோஒ பழம், கீரையோஒ கீரை, மோரோஒ மோரு.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய்! பூ, பழம் இப்படிச் சொல்லி விற்றால் வாங்குகிறவர்கள் காதுகளில் சரியாக விழாது. நீட்டிச் சொல்லும்போதுதான் அவர்கள் என்ன விற்கிறார்கள் என்பது தெளிவாகப் புரியும், இல்லையா?

மாணவர் : ஆமாங்க, ஐயா.

ஆசிரியர் : இதேபோலத்தான் புலவர்களும் தாம் இயற்றும் செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவுசெய்ய அளபெடையைப் பயன் படுத்துகிறார்கள்.

வெற்றி : இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள், ஐயா!

ஆசிரியர் : சொல்கிறேன். செய்யுளில் ஓசை குறையும்போது, ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிப்பதனை அளபெடை என்கிறோம்.

அளபு = மாத்திரை. எடை = எடுத்தல் என்பது பொருள்.

எழுத்தினது மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல்.

செந்தில்வடிவு : அளபெடை எத்தனை வகைப்படும், ஐயா?

ஆசிரியர் : இருவகைப்படும். முதலாவது உயிரளபெடை, இரண்டாவது ஒற்றளபெடை.

வெற்றி : உயிரளபெடை என்றால் என்ன, ஐயா?

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறையும்போது, அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இஃது, உயிரளபெடை எனப்படும். அவ்வாறு அளபெடுக்கும்போது, அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் குறியீடாக அதன்பக்கத்தில் வரும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனஎழுத்தாகவரும். இவ்வுயிரளபெடை மூவகைப்படும்.

வெற்றி : என்னென்ன வகைகள், ஐயா?

ஆசிரியர் : செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை. செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடையைச் செய்யுளிசை அளபெடை என்பர். ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை இன்னிசை அளபெடை என்பர். இவ்விரண்டும் அல்லாமல் பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை, சொல்லிசை அளபெடையாகும்.

செந்தில்வடிவு : சான்றுகளோடு விளக்கிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறையும் இடத்தில், அந்த ஓசையை நிறைவுசெய்ய சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் நின்ற உயிர்நெடில் எழுத்துகள் ஏழும், உரிய மாத்திரையிலிருந்து மிக்கு ஒலிக்கும். இதனையே

தமிழ்

செய்யுளிசை அளபெடை எனக் கூறுவர்.

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. – குறள், 809

இக்குறளைப் படித்துப் பாருங்கள். கெடா என்பது கெடாஅ என இறுதியிலும், விடார் என்பது விடாஅர் என இடையிலும் அளபெடுத்து வந்துள்ளது. எனவே, இது செய்யுளிசை அளபெடை ஆகும். இதற்கு இசைநிறை அளபெடை என்னும் வேறுபெயரும் உண்டு.

இன்னிசை அளபெடை

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. – குறள், 15

கெடுப்பதும், எடுப்பதும் என ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காக து என்னும் குறில் தூ என நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

சொல்லிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.– குறள், 544

இக்குறட்பாவில் தழீஇ என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது.

தழீ – தழுவுதல் என்னும் தொழிற்பெயர்ச் சொல், தழீஇ (தழுவி) என வினையெச்சச் சொல்லாகப் பொருள் தருவதற்கு அளபெடுத்ததனால் இது சொல்லிசை அளபெடை ஆயிற்று.

கண்ணன் : ஒற்றளபெடை என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது ஒற்றளபெடை எனப்படும்.

எங்ங்கி றைவனுள னென்பாய்.

வெஃஃகுவார்க் கில்லை வீடு.

இத்தொடர்களில் உள்ள ங் மற்றும் ஃ ஆகிய எழுத்துகள் இருமுறை வந்துள்ளன. இவ்வாறு ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்யும், ஃ ஒன்றும் ஆகப் பதினோர் எழுத்துகளும் ஒரு குறிலை அடுத்தும் இருகுறில்களை அடுத்தும் செய்யுளில் இனிய ஓசை வேண்டி அளபெடுக்கும். இவ்வாறு அளபெடுப்பதற்கு ஒற்றளபெடை என்பது பெயர்.

நினைவிற் கொள்க.

1. செய்யுளிசை அளபெடை (இசைநிறை அளபெடை) – செய்யுளின் ஓசையை நிறைவு செய்ய ஈரசைகொண்ட சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) உழாஅர், படாஅர்.

2. இன்னிசை அளபெடை – இனிய இசைக்காகக் குறில் நெடிலாக அளபெடுத்து, மூவசைச் சீர்களாக மட்டும் வரும். (எ.கா.) கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்.

3. சொல்லிசை அளபெடை – பெயர்ச்சொல் அளபெடுத்து, வினையெச்சப் பொருளில் வரும். இ என்னும் எழுத்தில் முடிவு பெற்றிருக்கும். (எ.கா.) நசைஇ, நிறீஇ.

4. ஒற்றளபெடை – வல்லினத்து க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும், இடையினத்தில் ர், ழ் என்னும் இரண்டும் ஆக இந்த எட்டு மெய்யெழுத்துகள் தவிரப் பிற மெய்யெழுத்துகள் அளபெடுக்கும்.

| எழுத்துவகை | | மாத்திரை |
|---|---|---|
| உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் | – | ஒன்று |
| உயிர்நெடில், உயிர்மெய்நெடில் | – | இரண்டு |
| மெய், ஆய்தம் | – | அரை |
| உயிரளபெடை | – | மூன்று |
| ஒற்றளபெடை | – | ஒன்று |

பயிற்சி : பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

1. பெறாஅ, கொடுப்பதூஉம், தழீஇ, அண்ணன்.
2. வாழ்ழ்க்கை, சங்ங்கு, நெஞ்ஞ்சு, கண்ண்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் – இத்தொடரில் ________ அளபெடை இடம்பெற்றுள்ளது.

அ) இன்னிசை ஆ) செய்யுளிசை இ) சொல்லிசை

2. உடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு – இக்குறட்பாத் தொடரில் ________ அளபெடை வந்துள்ளது.

அ) சொல்லிசை ஆ) இசைநிறை இ) இன்னிசை

3. கீழ்க்காண்பனவற்றுள் சொல்லிசை அளபெடை ________.

அ) எச்சம் பெறாஅ விடின் ஆ) வரனசைஇ இன்னும் உள்ளேன்.
இ) உண்பதூஉம்

கற்கண்டு

மொழி

க

# எழுத்து, சொல்

*மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம். மொழியின் சிறப்புகளை அறியவும் இலக்கணம் துணை செய்யும்.*

## எழுத்து

### சார்பெழுத்து

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துகள் ஆகும். அவற்றுள் உயிரளபெடை, ஒற்றளபெடை ஆகிய இரண்டு அளபெடைகள் குறித்து இங்குக் காண்போம்.

அளபெடுத்தல் - நீண்டு ஒலித்தல்.

பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசுவோம். அவ்வாறு பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது.

**எ. கா.** அம்மாஅ, தம்பீஇ

### 1. உயிரளபெடை

செய்யுளில் மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும்போது அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது **உயிரளபெடை** எனப்படும்.

உயிரளபெடை மூன்று வகைப்படும்.

#### அ) செய்யுளிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்போம். இதனை **இசைநிறை அளபெடை** என்றும் கூறுவர்.

ஓஒதல் வேண்டும் – மொழி முதல்
உறாஅர்க் குறுநோய் – மொழியிடை
நல்ல படாஅ பறை – மொழியிறுதி

#### ஆ) இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது **இன்னிசை அளபெடை** ஆகும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

#### இ) சொல்லிசை அளபெடை

செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது **சொல்லிசை அளபெடை** ஆகும்.

உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

நசை – விருப்பம்; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல், வினை எச்சமாக மாறியது.

### 2. ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும், ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது **ஒற்றளபெடை** ஆகும்.

எங்ங் கிறைவன்

எஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்

# உயிர்மெய், ஆய்தம்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : அனைவருக்கும் வணக்கம். கடந்த வாரம் இலக்கணத்தில் எந்தப் பகுதியைக் கற்றீர்கள்?

வளர்மதி : சார்பெழுத்துகளைக் கற்றோம், ஐயா.

ஆசிரியர் : பொன்னி, சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

பொன்னி : பத்து வகைப்படும், ஐயா.

ஆசிரியர் : முருகா, சார்பெழுத்துகளின் வகைகளைக் கூறு.

முருகன் : உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், ஐயா.

ஆசிரியர் : நன்று. நன்றாக நினைவில் வைத்திருக்கிறாய்! வளவா! கண், காண், கிளி இவற்றில் முதலிலுள்ள எழுத்துகளைக் கூறு.

வளவன் : க, கா, கி ஐயா.

ஆசிரியர் : அன்பரசி, வளவன் கூறிய எழுத்துகளுக்கான பெயரென்ன?

அன்பரசி : உயிர்மெய் எழுத்துகள், ஐயா.

ஆசிரியர் : எந்தெந்த எழுத்துகள் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும்?

அன்பரசி : உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும், ஐயா.

ஆசிரியர் : செல்வா, அன்பரசி கூறியதனைக் கரும்பலகையில் எழுதிக்காட்டு (க் + அ = க; க் + ஆ = கா; க் + இ = கி) கரும்பலகையில் எழுதியதனைப்போல மெய்யெழுத்துகள் பதினெட்டையும் உயிரெழுத்துகள் பன்னிரண்டுடன் சேர்த்து எழுத இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துகள் தோன்றும். உயிர்மெய் எழுத்து உயிரையும் மெய்யையும் சார்ந்திருப்பதால் இதனைச் சார்பெழுத்து என்கிறோம். நந்தா! உயிர், மெய்,

உயிர்மெய் எழுத்து ஆகியவற்றை விடுத்து, வேறு எழுத்து ஏதாவது இருக்கிறதா ? அப்படியிருக்குமெனில், அஃது என்ன எழுத்து எனத் தெரியுமா ? கூறு.

நந்தன் : தெரியும், ஐயா. அஃது அஃகேனம், ஐயா.

ஆசிரியர் : அஃகேனத்தைக் கூர்ந்து நோக்குங்கள். ஃ எனும் இவ்வெழுத்து மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ளது. ஆகவே, இதனை முப்புள்ளி, முப்பாற்புள்ளி எனக் குறிப்பிடுவர். இஃது உயிரோடும் மெய்யோடும் சேராமல் தனித்தே இருப்பதால், தனிநிலை எனவும் கூறுவர். போர் வீரர்கள் பயன்படுத்தும் தற்காப்பு ஆயுதத்தில் (கேடயம்) காணப்படும் மூன்று குமிழ்ப்புள்ளிகள்போன்று இருத்தலால் ஆய்தம் எனவும் கூறுவர். காவேரி..! ஆய்தஎழுத்து இடம்பெறும் சொற்கள் இரண்டு கூறு.

காவேரி : எஃகு, அஃதிலார், ஐயா.

ஆசிரியர் : மிக நன்று. ஆய்தஎழுத்து ஒரு சொல்லின் இடையில் மட்டுமே வரும். அவ்வெழுத்தின் முன் குறிலும், அதன்பின் வல்லின உயிர்மெய்க் குறிலும் வரும்.

பயிற்சி : கீழுள்ள சொற்களில் சார்பெழுத்துகளை வட்டமிடுக.

அ) அண்ணன் ஆ) எஃகு இ) கொம்பு ஈ) பண்பு உ) செல்வம்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.

உயிர்மெய் எழுத்துகள் ______________ வகையில் அடங்கும்.

1. சார்பெழுத்து 2. சுட்டெழுத்து 3. முதல் எழுத்து

2. அன்பு, அடக்கம், எஃகு – இச்சொற்களிலுள்ள சார்பெழுத்துகளை வட்டமிடுக.

3. விடுபட்ட எழுத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. க் + – = கு | 3. ம் + எ = – | 5. – + அ = ச | 7. த் + ஈ = – |
| 2. ப் + ஏ = – | 4. – + ஐ = பை | 6. வ் + – = வெள | 8. – + – = பூ |

### ஆ) குறுவினாக்கள்

1. அஃகேனத்தின் வேறுபெயர்களை எழுதுக.

2. அஃகேனம் சொல்லில் எவ்வாறு இடம் பெறும்?

# சார்பெழுத்துகளின் வகைகள்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : குழந்தைகளே வணக்கம்! மலர்விழி, உன் வீட்டில் யாரெல்லாம் இருக்கிறீர்கள்?

மலர்விழி : நான், அம்மா, அப்பா, தம்பி ஆகிய நால்வர் உள்ளோம், ஐயா.

ஆசிரியர் : சரி, வீட்டில் முதன்மையானவர்கள் நீயும் உன் தம்பியுமா?

மலர்விழி : இல்லை, ஐயா. அப்பாவும் அம்மாவும்தான்.

ஆசிரியர் : அப்படியா... நீயும் தம்பியும்...

மலர்விழி : அப்பா அம்மாவைச் சார்ந்து வாழ்கிறோம், ஐயா.

ஆசிரியர் : வீட்டில் முதல் பொறுப்பாளர்கள் பெற்றோர்கள். அவர்கள் தாமே தனித்து இயங்குகிறார்கள். எனவே, அவர்கள் முதன்மையானவர்கள். அதனைப்போலவே, நம் தமிழ்மொழியிலும் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மைபெற்று விளங்குவதால், அவற்றை முதலெழுத்துகள் என்கிறோம். குழந்தைகளாகிய நீங்கள், உம் பெற்றோரைச் சார்ந்திருப்பதனைப் போலவே, முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் என்கிறோம். உடல் – வண்ணமிட்ட இச்சொல்லில் உ என்பது உயிர் எழுத்து. ட, ல் என்பன என்ன எழுத்துகள்?

வேலன் : ட உயிர்மெய் எழுத்து, ல் என்பது மெய்யெழுத்து, ஐயா.

ஆசிரியர் : ட் + அ = ட. ட் என்னும் மெய்யெழுத்தும், அ என்னும் உயிர் எழுத்தும் சேர்ந்து, ட என்னும் உயிர்மெய் எழுத்தாகப் பிறந்தது. இதனைப்போன்றே மற்ற உயிர்மெய் எழுத்துகளும் உயிரையும் மெய்யையும் சார்ந்து வரும்.

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனச் சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.

மாணவர்கள் : முதலெழுத்துகள், சார்பெழுத்துகள்பற்றிக் கற்றுக்கொண்டோம். ஐயா.

பயிற்சி : கீழுள்ள சொற்களில் முதலெழுத்துகளை வட்டமிடுக.

அ) அன்பு ஆ) கடல் இ) இன்பம் ஈ) அம்மா உ) தமிழ்

# குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம்

## குற்றியலுகரம்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். முன் வகுப்பில் சார்பெழுத்துகள் பற்றியும், அவற்றின் வகைகள் பற்றியும் கற்றிருக்கிறீர்கள். இப்பொழுது குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம் ஆகியன குறித்துக் கற்றுக் கொள்ளவிருக்கிறீர்கள்.

மாணவர் : அம்மா, குற்றியலுகரம் என்றால் என்ன ?

ஆசிரியர் : குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம். குறுமை என்றால் குறுகிய என்பது பொருள். இயல் என்றால் ஓசை. உகரம் என்றால் உ என்னும் எழுத்து. எனவே, குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம்.

மாணவர் : குறுகிய ஓசையா, அப்படியென்றால் என்ன அம்மா ?

ஆசிரியர் : ஒவ்வோர் எழுத்துக்கும் ஒலிக்கின்ற காலஅளவு உண்டு. குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இரண்டு மாத்திரை, மெய்க்கு அரை மாத்திரை என்னும் கால அளவில்தான் எழுத்துகளை ஒலித்தல் வேண்டும். உகரம் குறிலானதனால் ஒரு மாத்திரைக் கால அளவே ஒலித்தல் வேண்டும். ஆனால், அஃது ஒரு மாத்திரையளவு ஒலிக்காமல் சில சொற்களில் அரை மாத்திரைக் கால அளவே ஒலிக்கும். அவ்வாறு ஒலிப்பதனைத்தான் குற்றியலுகரம் என இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவர் : அஃது, எங்கு எப்படிக் குறையும் ? அம்மா.

ஆசிரியர் : நன்றாகக் கேட்டீர்கள். சில சொற்களுக்கு இறுதியில் ஆறு வல்லினமெய் எழுத்துகளுடன் உகரம் சேர்ந்து (க் + உ = கு ; ச் + உ = சு ; ட் + உ = டு; த் + உ = து; ப் + உ = பு; ற் + உ = று) வரும்போது, அந்த உகரம் அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். கு, சு, டு, து, பு, று ஆகிய இந்த ஆறு எழுத்துகள் சொல்லின் இறுதியில் வருமாறு சில சொற்களைச் சொல்லுங்கள்.

மாணவர் : பசு, காடு, பந்து.

ஆசிரியர் : நான் சொன்னதுபோல் சு, டு, து ஆகிய எழுத்துகள் சொல்லின் இறுதியில் வந்துள்ளன. ஆனால், பசு என்பதில் ஒலிக்கும் சு வையும், காசு என்பதில் ஒலிக்கும் சு வையும், அச்சொற்களோடு சேர்த்து ஒலித்துக்கேளுங்கள். ஏதேனும் ஒலிவேறுபாடு தெரிகிறதா ?

மாணவர் : அவ்வளவாகத் தெரியவில்லையே, அம்மா.

ஆசிரியர் : பசு எனச் சொல்லும்பொழுது, அச்சொல்லிலுள்ள 'சு' ஒலியானது ஒரு மாத்திரை அளவு ஒலிக்கிறது. காசு என்னும் சொல்லை ஒலிக்கும்பொழுது, அச்சொல்லிலுள்ள 'சு' ஒலி அதற்குரிய ஒரு மாத்திரையளவு ஒலிக்காமல் குறைந்து ஒலிப்பதனை உற்றுக்கேட்டால், ஒலிவேறுபாட்டை அறிவீர்கள். இப்பொழுது இருசொற்களையும் ஒலித்துக்கேளுங்கள். ஒலிவேறுபாட்டை உங்களால் உணர முடிகிறதா?

மாணவர் : ஆமாம், அம்மா. குற்றியலுகரங்கள் இவ்வாறு எங்கெங்கே குறைந்து ஒலிக்கும்?

ஆசிரியர் : கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு வல்லின எழுத்துகள் தனிநெடிலைச் சார்ந்து வரும்போதும், பல எழுத்துகளைச்சார்ந்து சொல்லின் இறுதியில் வரும்போதும் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம், குற்றியலுகரம் எனப்படும். சொல்லின் ஈற்று அயலெழுத்தை அடிப்படையாகக்கொண்டு அதனை அறுவகையாகப் பிரிப்பர்.

மாணவர் : எப்படியம்மா...?

ஆசிரியர் : நாகு, காசு, ஆடு, மாது, கோபு, ஆறு – இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். வல்லின மெய்களின்மேல் ஊர்ந்த உகரம் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வந்துள்ளது. இவ்வெழுத்துகளுக்குமுன் என்னென்ன எழுத்துகள் உள்ளன?

மாணவர் : உயிர்மெய் நெட்டெழுத்துகள் நான்கும், உயிர் நெட்டெழுத்துகள் இரண்டும் வந்துள்ளன, அம்மா.

ஆசிரியர் : நல்லது. இவ்வாறு உயிர்நெடில், உயிர்மெய் நெட்டெழுத்துகளை அடுத்து வரும் உகரமேறிய வல்லின எழுத்துகள் நெடில்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

மாணவர் : நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்பது தெளிவாக விளங்குகிறது, அம்மா.

ஆசிரியர் : எஃகு, கஃசு, அஃது. இந்தச் சொற்களை ஒலித்துப் பாருங்கள். கு, சு, து என்னும் வல்லின மெய்கள்மேல் ஊர்ந்த உகரமானது ஆய்த எழுத்தைத் (ஃ) தொடர்ந்து வந்துள்ளது. அதனால், இது ....

மாணவர் : ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்தானே அம்மா.

ஆசிரியர் : நன்று. கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள அழகு, அரசு, பண்பாடு, உனது, உருபு, பாலாறு – இச்சொற்களைப் படித்துப் பாருங்கள். வல்லின மெய்களை ஊர்ந்த உகர எழுத்துகள் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வந்துள்ளன. அவற்றுக்கு முன் என்னென்ன எழுத்துகள் வந்துள்ளன?

மாணவர் : உயிர்மெய் எழுத்துகள் வந்துள்ளன, அம்மா.

ஆசிரியர் : இவ்விடத்தில் அவற்றை உயிர்மெய்யெழுத்துகள் எனச் சொல்லக் கூடாது. ழ = ழ் + அ; ர = ர் + அ; பா = ப் + ஆ எனப் பிரித்துப் பார்த்தல் வேண்டும். இப்போது சொல்லுங்கள்.

மாணவர் : உயிர்எழுத்துகள் வருகின்றன. அதனால், உயிர்த்தொடர்க் குற்றிய லுகரம்தானே அம்மா. ஆடு – என வந்தால் நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்றீர்கள். பாலாறு – இங்கும் 'று' என்னும் எழுத்துக்கு முன் லா வருகிறதே. இதனையும் நெடில்தொடர்க் குற்றியலுகரம் எனச் சொல்லாமல், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனச் சொல்கிறீர்களே!

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய்! நெடில்தொடர்க் குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளை ஈற்றில்கொண்டு ஏடு, காசு என ஈரெழுத்துச் சொல்லாகவே வரும். உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துகளுக்குமுன் இரண்டனுக்கு மேற்பட்ட எழுத்துகளைப்பெற்று வரும். ஈற்றயல் எழுத்து (அரசு, பாலாறு) உயிர்மெய்க் குறிலாகவோ நெடிலாகவோ இருக்கும். என்ன புரிகிறதா ?

மாணவர் : நன்கு விளங்கிற்று, அம்மா.

ஆசிரியர் : சுக்கு, கச்சு, பட்டு – இச்சொற்களைப் பாருங்கள். கு, சு, டு ஆகிய எழுத்துகளுக்குமுன், வல்லின மெய்யெழுத்துகள் வந்துள்ளன. அதனால்...

மாணவர் : வல்லினத்தொடர்க் குற்றியலுகரம்தானே, அம்மா.

ஆசிரியர் : அழகாகச் சொன்னாய்! இதனைச் சுருக்கமாக வன்றொடர்க் குற்றியலுகரம் எனக் குறிப்பிடுவர். சங்கு, மஞ்சு, நண்டு, சந்து – இச்சொற்களைப் படித்துப் பாருங்கள்.

மாணவர் : இவை மென்றொடர்க் குற்றியலுகரந்தானே, அம்மா.

ஆசிரியர் : ஆம். ஐயமே வேண்டாம். கொய்து, சார்பு, மூழ்கு... இச்சொற்கள் எவ்வகைக் குற்றியலுகரம் எனக் கூறுங்கள்.

மாணவர் : இடைத்தொடர்க் குற்றியலுகரம்தானே, அம்மா.

ஆசிரியர் : அருமையாகச் சொன்னீர்கள். இவ்வாறாக, வல்லின மெய்களின்மேல் ஊர்ந்த உகரம் சொல்லின் இறுதியில் நெடில் பக்கத்திலும், பல எழுத்துகளைச் சார்ந்தும் வரும்போது, அது தனக்குரிய மாத்திரை யிலிருந்து குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு ஒலிப்பது குற்றியலுகரம் எனப்படும். இது, தன் அயலெழுத்தை நோக்க, 1. நெடில் தொடர்க் குற்றியலுகரம், 2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம், 3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், 4. வன்றொடர்க் குற்றியலுகரம், 5. மென்றொடர்க் குற்றியலுகரம், 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் என அறுவகைப்படும்.

நினைவில் கொள்க.

1. கு, சு, டு, து, பு, று என்பன வல்லினமெய்களின்மேல் உகரம் ஊர்ந்து வரும் எழுத்துகள்.
2. குற்றியலுகரத்துக்கு அரை மாத்திரை.
3. ஈற்று அயலெழுத்தாகத் தனிநெடில், ஆய்தம், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைப் பெற்று வரும்.
4. நெடில்தொடர்க் குற்றியலுகரம் மட்டுமே இரண்டு எழுத்துகளைப்பெற்று வரும்.

   (எ.கா.) ஆடு, மாடு, காது.

   ஏனைய ஐவகைக் குற்றியலுகரச் சொற்கள் இரண்டனுக்கு மேற்பட்ட எழுத்துகளைப் பெற்று வரும்.

   (எ.கா.) சுக்கு, பாலாறு, காட்டாறு...

நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலிஇடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே. – நன்னூல், 94

## குற்றியலிகரம்



மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். முன்வகுப்பில் கற்றுக்கொண்ட இலக்கணப் பகுதியை வீட்டில் படித்துப் பார்த்தீர்களா ?

மாணவர் : குற்றியலுகரந்தானே அம்மா. படித்துப் பார்த்தோம்.

ஆசிரியர் : நல்லது. இன்று குற்றியலிகரம்பற்றிப் பார்ப்போம். இதனைக் குறுமை + இயல் + இகரம் எனப் பிரிக்கலாம். குறுமை என்றால் குறுகிய; இயல் என்றால் ஓசை; இகரம் என்றால் 'இ' என்னும் எழுத்து. எனவே, குறுகிய ஓசையுடைய இகரம், குற்றியலிகரம். குற்றியலுகரத்தின் உகரம் தன் ஒருமாத்திரையில் குறைந்து ஒலிப்பதுபோலவே குற்றியலிகரத்தில் வரும் இகரமும், தன் ஒருமாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கும்.

மாணவர் : அம்மா, எங்குக் குற்றியலிகரம் குறைந்து ஒலிக்கும் ?

ஆசிரியர் : நாகு + யாது = நாகியாது. வீடு + யாது = வீடியாது. இச்சொற்களை ஒலித்துப் பாருங்கள். நாகு, வீடு என்பன நெடில்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள். இவை நிலைமொழியாய் நிற்க, வருமொழியின் முதல் எழுத்து 'ய'கரமாக இருப்பின், உகரம் இகரமாகும். இந்த 'இகரம்'தான் குற்றியலிகரம் எனப்படும். அதாவது, நிலைமொழி குற்றியலுகரமாக இருந்து, வருமொழி யகரம் வரின், நிலைமொழி உகரம், இகரமாகத் திரிந்து தன்மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும்.

(எ.கா.) வண்டு + யாது = வண்டியாது; வரகு + யாது = வரகியாது; என்பது + யாது = என்பதியாது.

மாணவர் : அம்மா, வேறு எங்காவது குற்றியலிகரம் வருமா ?

ஆசிரியர் : வரும். கேண்மியா, சென்மியா ஆகியவற்றில் வரும்.

மியா என்னும் அசைச்சொல்லில் உள்ள இகரமும் ( மி = ம் + இ ) தன்மாத்திரையில் குறைந்து ஒலிக்கும். இதுவும் குற்றியலிகரம் எனப்படும்.

யகரம் வரக் குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய – நன்னூல், 93

(குறள் – குறைந்த)

## முற்றியலுகரம்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியனபற்றி முன் வகுப்பில் கற்றிருக்கிறீர்கள்.

மாணவர் : ஆமாம், அம்மா.

ஆசிரியர் : நல்லது. குறைந்துவரும் 'உகரம், இகரம்' ஆகியவற்றின் மாத்திரை அளவு என்ன ?

மாணவர் : அரை மாத்திரை, அம்மா.

ஆசிரியர் : நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள், மகிழ்ச்சி. தன்மாத்திரை அளவில் குறையாமல் இருந்தால், அதற்குப் பெயரென்ன ?

மாணவர் : தெரியவில்லையே, அம்மா.

ஆசிரியர் : அதற்குப் பெயர் முற்றியலுகரம். அதாவது, தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் முற்றியலுகரம்.

மாணவர் : முற்றியலுகரம் எங்கு வருமெனக் கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் :

1. பகு, பசு, படு, அது, தபு, பெறு – இவை தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரம் (கு, சு, டு, து, பு, று) பெற்ற முற்றியலுகரங்கள்.
2. காணு, உண்ணு, உருமு – இவற்றின் ஈற்றிலுள்ள மெல்லின (ணு, மு) உகரங்கள் முற்றியலுகரங்கள்.
3. எழு, தள்ளு, கதவு – இவற்றின் ஈற்றிலுள்ள இடையின உகரங்கள் (ழு, ளு, வு) முற்றியலுகரங்கள்.

இவ்வாறு தனிக்குறிலை அடுத்துச் சொல்லின் இறுதியில் வரும் வல்லின மெய்யின்மேல் ஊர்ந்து வரும் உகரமும், பொதுவாகச் சொற்களின் இறுதியில் மெல்லின மெய்யின்மேல் ஊர்ந்து வரும் உகரமும், இடையின மெய்யின்மேல் ஊர்ந்துவரும் உகரமும் ஆகிய மூன்றும் முற்றியலுகரம் எனப்படும்.

மாணவர் : நன்றி, அம்மா.

கற்கண்டு

# இயல் ஒன்று

# குற்றியலுகரம், குற்றியலிகரம்

**நினைவு கூர்க**

தமிழ் எழுத்துகளை முதலெழுத்து, சார்பெழுத்து என இரு வகையாகப் பிரிப்பர். உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். சார்பெழுத்து பத்து வகைப்படும். அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பனவாகும். சார்பெழுத்துகளில் ஒன்றான குற்றியலுகரம் பற்றி இனிக் காண்போம்.

## குற்றியலுகரம்

குழந்தை, வகுப்பு, பாக்கு ஆகிய சொற்களைச் சொல்லிப் பாருங்கள். மூன்று சொற்களிலும் 'கு' என்னும் எழுத்தை உச்சரிப்பதில் வேறுபாடு இருப்பதை உணரலாம். அவ்வெழுத்து சொல்லின் முதலிலும் இடையிலும் வரும்பொழுது முழுமையாக ஒலிக்கிறது. சொல்லின் இறுதியில் வரும்பொழுது ஒருமாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கிறது. கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். குறுமை+இயல்+உகரம் = குற்றியலுகரம்.

(எ.கா.) காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு

தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும். வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும். இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.

(எ.கா.) புகு, பசு, விடு, அது, வறு, மாவு, ஏழு

### தெரிந்து தெளிவோம்

தமிழில் எழுத்துகளைக் குறிப்பிடுவதற்கு கரம், கான், காரம், கேனம் ஆகிய எழுத்துச் சாரியைகளைப் பயன்படுத்துகிறோம்.

- குறில் எழுத்துகளைக் குறிக்க 'கரம்' (எ.கா.) அகரம், இகரம், உகரம், ககரம், மகரம்
- நெடில் எழுத்துகளைக் குறிக்க 'கான்' (எ.கா.) ஐகான், ஔகான்
- குறில், நெடில் எழுத்துகளைக் குறிக்க 'காரம்' (எ.கா.) மகாரம், ஏகாரம், ஐகாரம், ஔகாரம்
- ஆய்த எழுத்தைக் குறிக்க 'கேனம்' (எ.கா.) அஃகேனம்

## குற்றியலுகரத்தின் வகைகள்

குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ஆறு வகையாகப் பிரிக்கப்படும்.




### 1. நெடில்தொடர்க் குற்றியலுகரம்

தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'நெடில் தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும். இவை ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும்.

(எ.கா.) பாகு, மாசு, பாடு, காது, ஆறு .

### 2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா.) எஃகு, அஃது

### 3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (எ.கா.) | அரசு | (ர = ர் + அ) | கயிறு | (யி = ய் + இ) |
| | ஒன்பது | ( ப = ப் + அ) | வரலாறு | (லா = ல் + ஆ) |

### 4. வன்தொடர்க் குற்றியலுகரம்

வல்லின (க், ச், ட், த், ப், ற்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'வன்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா) பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று

### 5. மென்தொடர்க் குற்றியலுகரம்

மெல்லின (ங், ஞ், ண், ந், ம், ன்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'மென்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா.) பங்கு, மஞ்சு, பண்பு, பந்து, அம்பு, கன்று

### 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம்

இடையின (ய், ர், ல், வ், ழ், ள்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'இடைத்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா.) எய்து, மார்பு, சால்பு, மூழ்கு

### தெரிந்து தெளிவோம்

'வ்' என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.

மேலும் சு, டு, று ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்களும் இல்லை.

## குற்றியலிகரம்

வரகு+யாது – இந்த இரு சொற்களையும் சேர்த்து விரைவாக ஒலித்துப் பாருங்கள். வரகியாது என ஒலிப்பதை அறியலாம். முதல் சொல்லின் இறுதியில் உள்ள 'கு' என்னும் எழுத்து 'கி' என்று ஒலிக்கிறது. அதுவும் முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு தன் ஒரு மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் இகரம் 'குற்றியலிகரம்' எனப்படும். குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.

**குற்றியலிகரம் இரண்டு இடங்களில் மட்டும் வரும்.**

**இடம் – 1**

குற்றியலுகரச் சொற்களைத் தொடர்ந்து யகரத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்கள் வரும்போது குற்றியலுகரத்தில் உள்ள உகரம் இகரமாக மாறும். அந்த இகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

(எ.கா.) கொக்கு + யாது = கொக்கியாது
(க் + உ) (க் + இ)

தோப்பு + யாது = தோப்பியாது
(ப் + உ) (ப் + இ)

நாடு + யாது = நாடியாது
(ட் + உ) (ட் + இ)

எனப்படுவது + யாது = எனப்படுவதியாது
(த் + உ) (த் + இ)

**இடம் – 2**

'மியா' என்பது ஓர் அசைச்சொல் (ஓசை நயத்திற்காக வருவது). இதில் 'மி' யில் (மி = ம் + இ) உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும். இது சொற்களில் இடம்பெறும் போது தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

(எ.கா.) கேள் + மியா = கேண்மியா

செல் + மியா = சென்மியா

குற்றியலிகரம் தற்போது உரைநடை வழக்கில் இல்லை. இலக்கியங்களில் மட்டுமே உள்ளது.

கற்கண்டு

இயல் இரண்டு

# நால்வகைக் குறுக்கங்கள்

ஒவ்வோர் எழுத்துக்கும் அதை ஒலிப்பதற்கு உரிய கால அளவு உண்டு. இதை மாத்திரை என்பர். ஆனால் எல்லா எழுத்துகளும் எல்லா இடங்களிலும் தமக்குரிய மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதில்லை. சில எழுத்துகள் சில இடங்களில் தமக்குரிய கால அளவைவிடக் குறைவாக ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் எழுத்துகளைக் குறுக்கங்கள் என்கிறோம்.

## ஐகாரக்குறுக்கம்

ஐ, கை, பை என ஐகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது. வையம், சமையல், பறவை என சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.

## ஔகாரக்குறுக்கம்

ஔ, வெள என ஔகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது. ஔவையார், வௌவால் எனச் சொற்களின் முதலில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஔகாரம் ஔகாரக்குறுக்கம் எனப்படும்.

ஔகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வராது.

## மகரக்குறுக்கம்

அம்மா, பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகர மெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

வலம் வந்தான் என்பதில் மகர மெய்யெழுத்தை அடுத்து வகர எழுத்து வருவதால் மகரமெய்யானது தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.

www.tntextbooks.in

போலும் என்னும் சொல்லைப் போன்ம் என்றும், மருளும் என்னும் சொல்லை மருண்ம் என்றும் செய்யுளில் ஓசைச் சீர்மைக்காகப் பயன்படுத்தினர். இச்சொற்களில் மகரமெய்யானது ன், ண் ஆகிய எழுத்துகளை அடுத்து வருவதால் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் மகரம் மகரக்குறுக்கம் எனப்படும்.

**ஆய்தக் குறுக்கம்:**

அஃது, எஃகு ஆகிய சொற்களில் ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

முள் + தீது என்பது முஃடீது எனவும், கல் + தீது என்பது கஃறீது எனவும் சேரும். இச்சொற்களில் உள்ள ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம் ஆய்தக்குறுக்கம் எனப்படும்.

## கற்பவை கற்றபின்

ஐகார, ஔகார, மகர, ஆய்தக்குறுக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் சொற்களைத் தொகுத்து எழுதுக.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ______.

   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு

2. மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் ________.

   அ) போன்ம் ஆ) மருண்ம் இ) பழம் விழுந்தது ஈ) பணம் கிடைத்தது

3. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது _______.

   அ) ஐகாரக் குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம்

   இ) மகரக் குறுக்கம் ஈ) ஆய்தக் குறுக்கம்

குறுவினா

1. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்?
2. சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது?
3. மகரக்குறுக்கத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

# எழுத்து

## ( சார்பெழுத்துகள் : ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள் )

உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துகளை முதலெழுத்துகள் எனவும், அவற்றைச் சார்ந்து வரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் எனவும் முன் வகுப்புகளில் கற்றறிந்தோம். இனி ஐகார, ஔகார, ஆய்த, மகரக் குறுக்கங்கள் பற்றிக் காண்போம்.

### 1. ஐகாரக்குறுக்கம்

'ஐ' என்னும் நெட்டெழுத்தைத் தனியாக ஒலித்துப் பாருங்கள். அது, தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கும். ஆனால், இவ்வெழுத்தைச் (ஐ) சொல்லின் முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வருமாறு எழுதி ஒலித்துப் பாருங்கள். அஃது, ஒலி குறைந்து ஒலிப்பதனை உணர்வீர்.

ஐம்பது – சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது

தலைவன் – சொல்லுக்கு இடையில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது

கடலை – சொல்லுக்கு ஈற்றில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது

இவ்வாறு சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

### 2. ஔகாரக்குறுக்கம்

'ஔ' என்னும் நெடில் எழுத்தும், 'ஐ' என்னும் நெட்டெழுத்தைப்போலவே தனியாக ஒலிக்கும்போது, இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பதில்லை. ஆனால், சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம் ஒன்றரை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும். அதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும்.

(எ–டு) ஔவை, வௌவால் – ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது.

சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.

தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும், ஔவும் முதலற் றாகும் – நன்னூல், 95